# சித்தர் நெறி

மெய்ஞ்ஞானக்கொடி

மெய்ஞ்ஞானக்கொடி

சீவநெறி => சிவநெறி => சைவநெறி => மெய்யான இந்துமதம்

## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி
## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்
## அவர்கள் அருளியவை



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

**மார்கழி மாத வெளியீடு**

(December 2012-January 2013)

**பதினெண்சித்தர்கள் வகுத்தளித்த மெய்யான இந்துமத ஆண்டு 43,73,113**

www.gurudevar.org Email: indhuism@gmail.com

**காணிக்கை ரூ.4/-**

# உள்ளுறை

1. ‘வாருங்கள் எல்லோரும் சித்தராகலாம்’ - சித்தர் மாநாடு அழைப்பு அறிவிக்கைப் பாகம்-1

2. ‘வாருங்கள் எல்லோரும் சித்தராகலாம்’ - புத்தகம் பாகம்-2 (விரிவானது)

(இந்தப் புத்தகத்தின் இறுதிப் பகுதியான ‘சித்தர் மாநாடு ஏன்?’ என்ற கட்டுரை போதிய இடமின்மையால் அடுத்த இதழில் வெளியாகும்.)

3. நான்கு வகைப் பீடாதிபதிகளின் ஞான உலா - மெய்யான இந்துமதம் காக்கும் எண்வகை ஆச்சாரியார்கள். (இந்தக் கட்டுரையிலேயே இன்றைய கிறித்துவ மத மூலவரான தேவகுமாரன் இயேசு மெய்யான இந்துமத ஆச்சாரிய மரபில் வருபவரே என்ற குறிப்பு உள்ளது.)

4. குருபாரம்பரிய கூறும் தேவகுமாரன் ஈசா பற்றிய குறிப்பு.

*[1997இல் குருதேவர் ‘சித்தர்கள் மாநாடு’ மதுரையில் கூட்டுவதற்கு அறிவித்த போது வெளியிட்ட புத்தகம் முதல் பகுதியும் இரண்டாம் பகுதியும் அடுத்தடுத்து உள்ளன.]*

# பதினெண்சித்தர் மடம் ஞானாச்சாரியார் சித்தர் கருவூறார்

**சித்தர்கள் மாநாடு**
**வாருங்கள் எல்லோரும் சித்தராகலாம்!**

**அழைக்கிறார்!**
**ஞானாச்சாரியார், சித்தர் கருவூறார்!**

பேரன்புடையீர்!

யாவும் வெற்றியாகட்டும்! நன்மையாகட்டும்!

உலக ஒற்றுமைக்காகவும், உலக நன்மைக்காகவும், உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டிற்காகவும், உலக அமைதிக்காகவும், உலக மானுடரின் நிம்மதிக்காகவும், உலக மானுடர்களின் ஒற்றுமைக்காகவும் இந்துமத அருட்கலைகளை உலகெங்கும் பரப்புவதற்காக **“சித்தர்கள் மாநாடு”** கூட்டப் படுகிறது.

பதினெண்சித்தர் மடாதிபதிகளாகவும், பதினெண்சித்தர் பீடாதிபதிகளாகவும் இம்மண்ணுலகில் தோன்றக் கூடியவர்களே, 48 வகையான சித்தர்களை தோற்றுவிக்கிறார்கள்.

1) இன்றைய தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, சமய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் ஐந்து வகையான வாழ்க்கை முறைகளும் நேரிடையாகவோ அல்லது இலைமறை காயாகவோ சுற்றி வளைத்து மதத்தை அடிப்படையாகக் கொண்டுதான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தப் பேருண்மையை அனைவரும் தெரிந்தும், புரிந்தும் உள்ளனர். ஆனால், வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாமல் வாழுகின்றனர். மேலும், நம் நாட்டில் முக்கால் பங்கிற்கு மேல் கடவுள் மறுப்பாளர்களாகவும், மதத்தை எதிர்க்கும் நாத்திகர்களாகவும் காட்டிக்கொண்டு போலியான வாழ்க்கை வாழுகின்றார்கள். எனவேதான், நம் மக்களிடையே எல்லாமே போலியாகவும், நிறைவு

நிம்மதி இல்லாத நிலையும், உண்மையான பற்று, பாசத்திற்கு ஏங்குகின்ற நிலையும் இருக்கின்றன. ஆன்மீகச் சங்கங்கள், ஆன்மீகக் கழகங்கள், ஆன்மீக இயக்கங்கள் மூலம்தான் இவ்வுலகில் உள்ள இன்னல்களையும், இடுக்கண்களையும், இழிவு அழிவுகளையும் சரி செய்ய முடியும்.

2) இப்பேருண்மையை முழுமையாக உணர்ந்தவர்களால்தான் இம் மண்ணுலகிற்கு வழிகாட்ட முடியும். எனவேதான், நமது பேராசான், சிந்தனை சிற்பி, அருளாட்சி நாயகம், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரை கருவூரர் அவர்கள், அருளுலக யோகமுடையவர்க்கெல்லாம் சன்னிதானப் பட்டமும், அதைத் தொடர்ந்து பயிற்சிக்குப் பின் சித்தர் நிலையும் வழங்கிட ஆணையிட்டுள்ளார்.

3) ஆதிசிவனூர் இந்து வேதத்தில் பட்டியலிட்டு காட்டுகின்ற பன்னிரண்டு வகையான பாதிப்புக்களுக்கு பரிகாரமாக ஓமம், ஓகம், யாகம், யக்ஞம், வேள்வி எனும் ஐந்து வகையான நெருப்பு குண்டங்கள் மூலம் முறையாக பூசைமொழிகளை ஓதியும், அவிர்ப்பலிகளை வழங்கியும் அருள்நலம் விளைவிக்கும் அருட்பணி விரிவாக்கத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப் படுகிறது.

4) இந்த ஐந்தீ வேட்டல் பூசைகளை தனி மனிதர்களுக்காகவும், குடும்பங்களுக்காகவும், தனிப்பட்ட சமுதாயங்களுக்காகவும், ஊர்ப் பொது நன்மைக்காகவும், உலக ஆன்ம நேய ஒருமைப் பாட்டிற்காகவும், கோயில்களில் புத்துயிர்ப்புக்காகவும், புதுக் கோயில்களின் உயிர்ப்புக்காகவும் குடமுழுக்கு விழாக்களுக்காகவும் செய்யப்படுகிறது.

5) நமது சமயத்திலும், சமுதாயத்திலும் ஏற்பட்டுவிட்ட அறியாமைகளையும், மடமைகளையும், மூட நம்பிக்கைகளையும், கண்மூடிப் போக்குகளையும் முழுமையாக அகற்றிட அருளாளர்களால்தான் முடியும். அப்படிப் பட்ட அருளாளர்களை உருவாக்குகின்ற மடம்தான் பதினெண் சித்தர் மடம். இப்பிறவியில் அருளை அனுபவப் பொருளாகப் பெற்றும், பிறருக்கு வழங்கியும் செயல்படுபவர்களை உருவாக்கி மேற்படி நமது

சமயத்தையும், சமுதாயத்தையும் மாற்றிட முடியும் என்று **பதினெண் சித்தர் மடத்தின் மடாதிபதி ஞாலகுரு சித்தர் கருவூரார்** குறிப்பிடுகின்றார்.

6) தனித்து இயங்கக் கூடிய வல்லமை பெற்ற “ஆவி”, “ஆன்மா”, “ஆருயிர்” என்ற மூன்றின் இணைப்பால்தான் மனிதனுடைய “சீவன்” என்ற ஒன்று உருவாக்கப்படுகிறது என்ற பேருண்மை பதினெண்சித்தர்களால் விரிவாக, விளக்கமாக அறிவிக்கப் பட்டுள்ளது. இந்தச் சீவன், ஊழ்வினை, விதி என்ற இரு பெரும் சத்திகளால் அடக்கியாளப் படுகிறது. இவற்றுக்கெல்லாம் உள்ளீடாக; ஒவ்வொரு மனிதனும் தனது குடும்பப் பாரம்பரியப் பண்பாட்டுக் கூறுபாடுகளுக்கும், பாவ சாபங்களுக்கும் ஏற்பவே பெரும்பாலும் செயல்பட்டிடு-கின்றான். இதனால்தான் ஒவ்வொரு குடும்பத்திலும் வேறுபாடுகளும் முரண்பாடுகளும் உண்டாகின்றன. அதனால்தான் நாத்திகனும், ஆத்திகனும் தொடர்ந்து தோன்றிக் கொண்டு வருகிறார்கள்.

7) இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் இப்பூவுலகில் காலங்கள் தோறும் நாற்பத்தெட்டு வகைச் சித்தர்களில் ஒரு சில வகைச் சித்தர்களாவது அடிக்கடி தோன்றி ஆன்மீக ஒருமைப் பாட்டையும், ஆன்ம நேய ஒற்றுமையையும் பாதுகாத்துப் பரப்பிடுகின்றனர்.

8) உடலைப் பாதுகாக்கும் சித்த மருத்துவக்கலையில் தேர்ந்தவர்களும் ஒரு வகைச் சித்தர்கள்தான். சீவனுக்குரிய ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற மூன்றினையும் பாதுகாக்கக் கூடிய திருவருட் கலைகளில் வல்லவர்கள் நாற்பத்-தெட்டு வகைச் சித்தர்களாக உள்ளார்கள். இவர்கள் அனைவரையும் உருவாக்கிச் செயல்படச் செய்பவர்களே பதினெண்சித்தர்கள்.

9) இந்துக்கள் இந்துக்களாக வாழ்வதற்கும், இந்து மத பூசைமுறைகளை முறையாகச் செய்து அருளாளர்களாக வாழ்ந்திடவும் வழிகாட்டுகிறது பதினெண் சித்தர் மடம்.

- குல தெய்வம், குடும்ப ஆண்டவர், கிராம தேவர்

தேவதை, நாட்டுக் கடவுளர்களை முறைப்படி வழிபாடு செய்து அருளைப் பெற்றிடவும்!

- தனிமனித நிம்மதி பெறவும்!
- தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு சிறக்கவும்!
- தனிமனித வாழ்வில் ஏற்படும் மாற்றங்களை மாற்றியமைத்து நல்வாழ்வு வாழ்ந்திடவும்!
- அருளைப் பெறுவதற்கும், பிறருக்கு வழங்குவதற்கும் அருளாளராக வாழ்ந்திடவும்!
- இந்துமத அருட்கலைகளை முறையாகப் பெற்றிடவும்!
- இந்துமதக் கோயில்களை பாதுகாத்திடவும்!
- இந்துமதக் கோயில்களில் இந்துவேத முறைப்படி பூசை செய்து அருள்நலம் விளைவிக்கவும்!
- தன்னையறியவும், தன்னையறிந்து தலைவணுகிய இறைவனை அறியவும்!
- முற்பிறப்பு, இப்பிறப்பு, மறுபிறப்பை உணரவும், பிறப்பிறப்பற்ற பெருநிலை பெறவும்!
- மனிதர்கள் கடவுள் நிலையைப் பெறவும்!
- சித்தர்களாகி அருளாட்சி அமைக்கச் செயல்படுவதற்கும் உங்களை அழைக்கிறார் **அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், ஞாலகுரு சித்தர் கருவூறார்**.

10) இப்படி 'சித்தர்களை' உருவாக்கும் அருட்பணி விரிவாக்கத் திட்டத்தை உருவாக்கிச் செயல்படுகிறார் ஞானாச்சாரியார் சித்தர் கருவூறார். இந்த அருளுலகச் செயல்திட்டத்தின் விரிவாக்கத் திருவிழாதான் **"சித்தர்கள் மாநாடு"**.

11) பெருவாரியான மக்கள் அருளுலகப் பயிற்சிகளையும், முயற்சிகளையும் தெரிந்து செயல்பட முன்வரும் திருவிழாதான் **"சித்தர்கள் மாநாடு"**.

12) சித்தர் நெறியான சீவ நெறி யெனும் மெய்யான இந்துமதத்தைப் புரிந்து பயனடையும் திருவிழாதான் **"சித்தர்கள் மாநாடு"**.

13) உடலைப் பாதுகாத்து ஆவி, ஆன்மா, ஆருயிர் வளர்த்து பிறப்பிறப்பற்ற பெருநிலை பெறும் முயற்சிக்குரிய திருவிழாதான் **"சித்தர்கள் மாநாடு"**.

14) உலக நன்மைக்காகவும், அமைதிக்காகவும், நிம்மதிக்காகவும், ஒற்றுமைக்காகவும், உலக ஆன்ம நேய ஒருமைப் பாட்டை உருவாக்கும் திருவிழாதான் **"சித்தர்கள் மாநாடு"**.

15) இம் மண்ணுலகின் மூல மதமும், முதல் மதமும், முழுமையான மதமும், **இந்துமதமே** என்று பறை சாற்றிடும் திருவிழாதான் **"சித்தர்கள் மாநாடு"**.

16) கோயில் கருவறைகளில் பூசை செய்யும் பூசாரிகளுக்கு முறைப்படி பூசை செய்து அருள் நலம் விளைவிக்கும் கலையை பயிற்று விக்கும் திருவிழாதான் **"சித்தர்கள் மாநாடு"**.

17) பகுத்தறிவுப் போக்குடன், விஞ்ஞான முறையையும் கையாண்டு, நமது மதம் உலக மதங்களுக்கெல்லாம் முந்தியது, தொன்மையானது, பழமையானது, பயன் மிக்கது, மானுட வாழ்க்கைக்குப் பாதுகாப்பானது என்ற பேருண்மையை நம் நாட்டவர்களையும், வேற்று நாட்டவர்களையும் புரிந்திட வைத்திடும் திருவிழாதான் **"சித்தர்கள் மாநாடு"**.

18) அருளுலகப் பொருளுலக இருள்களை அகற்றிடும் **கணபதி ஓமம், சண்டி ஓமம், சுதர்சன ஓமம், ஐயப்பன் ஓமம், முருகன் யாகம், ஆஞ்சநேயர் யக்ஞம், உருத்திரர் வேள்வி, பெருமாள் வேள்வி**களை இம்மண்ணுலக மக்கள் அனைவரும் பெற்றிடும் திருவிழா தான் **"சித்தர்கள் மாநாடு"**.

அதற்காகத்தான் **"வாருங்கள் நீங்களும் சித்தராகிடலாம்"** என்ற குறிக்கோள் அறிவிப்புடன் இந்தச் **"சித்தர்கள் மாநாடு"** கூட்டப் படுகின்றது.

குறிப்பு:- சித்தர் நிலையைப் பெற விரும்புபவர்களும், சித்தர்கள் மாநாட்டில் விரிவுரையாற்ற விரும்புபவர்களும், கட்டுரை வாசிக்க விரும்புபவர்களும், கவிதைகளை அரங்கேற்ற விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்

**ஞானாச்சாரியார்**
**சித்தர் கருவூரார்**
**பதினெண்சித்தர் மடம்**

**[மூலம்: 'வாருங்கள் சித்தராகலாம்' என்ற புத்தகத்தின் கட்டுரைப் பகுதி]**

# ஞானச்சாரியார் சித்தர் கருவூரர் சித்தர்கள் மாநாடு

### அறிமுகவுரை:-

அன்புடையீர்,

'வாருங்கள் எல்லோரும் சித்தராகலாம்' என்று இந்நூலின் இரண்டாம் பாகம் வெளியிடுவதன் அவசியம் யாதெனில் இந்நூலின் முதற்பாகத்தைப் படித்து விட்டு அதன் கூற்றுக்களைக் கண்டு வியப்புற்று பல அடியான்களின் 'குமுறல் கடிதங்கள்' வந்தன. அதனை விளக்குமாறு இந்நூல் வெளியிடப்படுகிறது.

எடுத்துக்காட்டாக ஒரு அடியவனின் குமுறலைக் காண்போம்.

ஒரு அடியானின் குமுறல்:-

"தங்களை குருவாக அடைய வேண்டும் என நினைத்தேன். ஆனல், குருவுக்கெல்லாம் குருவானவரை ஒளியின் வடிவான -வரை பணிய வேண்டும் என்ற எண்ணம் உதயமாகிறது. பதினெண் சித்தர்களைப் பார்க்க வேண்டும். அவர்களைப் போல் மனம் ஒன்றுபட்ட நிலை, சித்து விளையாடல் நிலை, சித்து விளையாடல் கலை, மனித நேயம், மருத்துவம், தெய்வங்களைப் பூசித்தல், மனிதர்களின் மனதிலுள்ள கருத்து வேறுபாடுகளை நீக்கி ஒன்றுபட்டு வாழவைத்தல், எம் மனதிலுள்ள கருத்து வேறுபாடு நீக்கி, மன அழுக்குகளையும் நீக்கி, பஞ்சமா பாதகங்களையும் நீக்கி, சிவயோக நிலை பெறுதல், இவற்றிற்கெல்லம் எம்மால் குருகுல வாசம் புரியத்தான் முடியவில்லை! என்னுடைய வாழ்க்கை நிலை எனக்குத் தெரியவில்லை! கல்வி, ஞானம் நிறைவாகவும் கிடையாது. அத்திவாரம் கூட அடிக்கடி கலைந்து விடும்! பிறகு எப்படி யான் சித்தனுவது? எப்படி துன்பப் படுவோரின் கண்ணீரைத் துடைப்பது? வாழ்க்கையில் ஓடுவோரின் கூட்டத்தில் நடக்க முடியாதவன் ஜெயிப்பது எப்படி? தேவர்களை, அண்டங்களை ஆளுகிறவர்களைப் பார்ப்பது எப்படி? எல்லாமே எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது! இந்த எண்ணங்களை யெல்லாம் இந்தப் புத்தகம் என்னுள் எழவிட்டு இந்த எண்ணங்களுக்கு ஏற்ற செயல் இல்லாமல் பிணம் போல் கிடக்கின்றேன்."

இப்படிப் பல அடியவர்கள் புலம்புகிருர்கள். இவற்றிற்கெல்லாம் வடிகாலாக, வழிகாட்டியாக, வழித்துணையாக ஏற்கனவே நமது பதினெண் சித்தர் மடம் இந்து வேதாகம பாடசாலை நிகழ்த்தியும், ஆசிரமம், குருகுலம், தருகுலம், கருகுலம், திருகுலம் முதலிய பல நிறுவன நிர்வாகங்களைச் செயலாக்கியும், நமது இந்துவேதக் கருத்துக்களை, செய்திகளை, வரலாறுகளை, வாழ்வியல்களை எளிமையாக எல்லோரும் தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்து, உணர்ந்து செயல்படப் பாடுபடுகிறது.

மேலும், இந்த அடியானைப் போன்ற இளைஞர்கள் துடிப்பு மிக்க உண்மையுள்ள வீர இளைஞர்கள்! இந்து மதத்தை, இந்து வேதத்தை, தமிழ் மொழியைப் பாதுகாக்க முன்வந்தே தீர வேண்டும். நம் மக்கள் தங்களை “தமிழன்” என்று சொல்லிக் கொள்ளவோ “இந்து” என்று சொல்லிக் கொள்ளவோ தெரியாதவர்களாக, புரியாதவர்களாக, விரும்பாதவர்களாக இருக்கின்றனர். இதை முதலில் மாற்றியாக வேண்டும்.

அப்போதுதான் தனிமனித வாழ்வில் தன்னம்பிக்கை, துணிவு, ஆர்வம் முதலியவை ஏற்படும். குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு ஆகியவற்றில் பற்று, பாசம், உறவு, நட்பு முதலியவை பெருமளவு ஏற்படும், உருவாகும்.

நமது இந்துமதத்தின் பெயரால் எண்ணற்ற அரசியல் கட்சிகள், திருச்சபைகள், மடங்கள், கழகங்கள், இயக்கங்கள், சமய சமுதாய கலை இலக்கிய கட்சிகளும், சங்கங்களும் இருந்தும் அவைகளெல்லாம் நமது மெய்யான இந்து மதத்தை, இந்து வேதத்தை, சித்தர் நெறியைப் பற்றித் தெரியாதவைகளாகத்தான் தொடர்ந்து இருந்து வருகின்றன. இந்துக்களை வழிநடத்த முடியாதவைகளாகத்தான் இருக்கின்றன.

எனவே, ஒவ்வொரு இந்துவும், நமது இந்துமத வாழ்வில் குறிப்பிடப்பட்டுள்ள பழக்க வழக்கங்கள், சட்ட திட்டங்கள், சடங்கியல்கள், வாழ்வியல் நெறிகள், பூசைமுறைகள், விதிகள், ... முதலியவற்றை தெரிந்திருக்க வேண்டும் என்ற நேரடி முயற்சியில் நமது குருதேவர் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். அப்போதுதான் இந்தத் திருநாட்டில் நிலவி வருகின்ற போலிச் சடங்கியல்கள், போலி பழக்க வழக்கங்கள், போலி சட்டதிட்டங்கள், மூட நம்பிக்கைகள்,

ஆபாசக் கற்பனைகள், சூழ்ச்சிகள், அன்னியர்களால் உருவாக்கி விடப்பட்டுள்ள ஏமாற்றுக்கள், சுரண்டல்கள், பிரிவினை, சாதிக் கொடுமைகள், தமிழினத் தாழ்ச்சி மற்றும் இகழ்ச்சிகள் ஆகியவற்றை அகற்ற முடியும், விரட்ட முடியும்.

எனவே, இந்த மாபெரும் அருட்பணியில் ஒவ்வொரு இந்துவும் பெருமிதத்துடன் செயல் பட்டு இந்துக்கள் அனைவரையும் பதினெண்சித்தர் மடத்தில் உறுப்பினராக்க வேண்டும். ஏனெனில், பதினெண் சித்தர் மடம், பீடம்தான் இந்துமதத்தையும், இந்து வேதத்தையும் தோற்றுவித்தது. இந்தப் பதினெண் சித்தர் மடத்தின் மடாதிபதியாக, பீடாதிபதியாக இருக்கின்ற 'ஞானாச்சாரியார்கள்'தான் இந்துக்களின் 'முழுமுதல் தலைமை ஆச்சாறியக் குருபீடம்". இந்த முழுமுதற் தலைமை ஆச்சாறியக் குருபீடமாக இன்று வாழும் 12வது பதினெண் சித்தர் பீடாதிபதி ஞானாச்சாரியார் சித்தர் கருவூரர் அவர்களும், இவரது சீடர்களும் இன்றைக்கு ஓர் இமாலயப் பணியாக ஒவ்வொரு இந்துவையும் தட்டி எழுப்பி, அவனுக்கு இந்துமத அறிவையும், வரலாற்றையும், இலக்கியங்களையும், இந்துமத அருளாளர்களின் சாதனைகளையும், போதனைகளையும் உணர்த்திட இவற்றிற்கு ஊடே, ஒவ்வொரு இந்துவின் ஊழ்வினை, ஆள்வினை, விதி இவற்றிற்கேற்ப முற்பிறப்பு, மறுபிறப்பு, மற்றும் இப்பிறப்பின் மகிமை, இப்பிறப்பில் ஆன்மீகத்தை உணருவது எப்படி? இப்பிறப்பில் உயரிய நிலையை (பத்தி, சத்தி செலுத்தி சித்தி நிலை பெற்று முத்தியை) அடைய "வாருங்கள் எல்லோரும் சித்தராகலாம்" என்ற நூலின் இரண்டாம் பாகம் வெளியிடப் படுகிறது.

**அருள் என்பது எத்தகையது?**

மின்சாரத்தினால் எப்படிப்பட்ட வண்ண விளக்குகள் வேண்டுமானாலும் எரியும்; எந்த அளவிலும் சிறிய பெரிய மின் விசிறிகள் ஓடும்; அடுப்புக்கள் எரியும்; இரயில் வண்டித் தொடர் ஓடும்; ஆலைகள் இயங்கும். ஆனால் மின்சாரம் ஒன்றுதான். அதுபோல் எத்தனை ஆயிரமாயிரம் மதங்கள் இருந்தாலும் அருள் ஒன்றுதான். அந்த அருளை கல்லுக்கும், மண்ணுக்கும், பயிரினங்களுக்கும், உயிரினங்களுக்கும், ... தரக்கூடிய வல்லமை பெற்ற, வல்லமைமிக்க அருட்கொடை வள்ளல்களே பதினெண் சித்தர் பீடாதிபதிகள், பதினெண்சித்தர்கள், 48 வகைச் சித்தர்கள்.

**- 30-6-89இல் குருதேவர் விரகாலூர் அடியானுக்கு எழுதிய அஞ்சலில் உள்ள கருத்து**

# அணிந்துரை:-

சித்தர் பொன்னுக்கீசர்,
காஞ்சிபுரம்

சகோதர சகோதரிகளுக்கு,

எமது வணக்கம்,

"வாருங்கள் எல்லோரும் சித்தராகலாம்" என்ற தலைப்பிட்ட இந்நூல் அனைத்துத் தரப்பட்ட மக்களையும் கவரக் கூடிய ஒரு நூலாகும்! ஏனெனில், "எல்லோரும் சித்தராகலாம்" என்ற அழைப்பு வியக்கத் தக்க, அதே சமயம் விரும்பத் தக்க ஒன்று. இன்றைய கலியுகத்தில் இந்து மதத்தையும் அதன் பழமையையும் அதன் வலிமையையும் அறியவும்; சித்தர்கள் யார்? அவர்களுக்கு மூலமாக விளங்கும் மூலப் பதினெண் சித்தர்கள் யார்? இவர்களுக்கும் இந்துமதத்தின் வலிமைக்கும் தொடர்பு என்ன? என்று அறிய இந்நூல் ஓர் சிறப்புக் கையேடு.

இந்து வேதத்தில், இந்து மதத்தில் உள்ள வாழ்வியல் கோட்பாடுகள், தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு என்று பகுத்து ஒவ்வொருவரும் எப்படி வாழ வேண்டும் என்ற பண்பாட்டை விளக்கும் நூலாக, இந்துமதத்தின் உண்மை வரலாற்றை எடுத்து இயம்புகிறது.

இந்நூல் இந்துவேத மத ஆண்டாக 43,73,098 வருட பாரம்பரியத் தொகுப்பாக சுருக்கி வரையப்பட்டு இருக்கின்றது. சித்தர்கள் எங்கெங்கு, எப்படி யெப்படியெல்லாம் செயல் பட்டார்கள்! கோயில்களை யெல்லாம் உருவாக்கி அந்தக் கோயிலின் ஆகம விதிகளை உருவாக்கி, அக்கோயில்களை இந்துவேதக் காப்பகங்களாக, செயலகங்களாக, தெய்வீக மருத்துவ நிலையங்களாக உருவாக்கி செயல்பட்டிருக்கிறார்கள் என்ற கூற்று, எல்லோரையும் சித்தராக்கிட முனைகிறது.

கடவுள்கள் யார்? கடவுளுக்கும் சித்தர்களுக்கும் தொடர்பு என்ன? கடவுளையே உருவாக்கும் வல்லமை பெற்றவர்களாக சித்தர்கள் விளங்கியிருப்பது குறித்து இந்நூல் அருமையாக விளக்குகிறது. கண்கவர் சிற்பங்கள், விண்ணுயர்ந்த கோபுரங்கள் வடிவமைக்கும் விதத்தை சித்தர்கள் உருவாக்கி, இதோடு மட்டுமில்லாமல் கோயிலில் ஓதப்படும் தமிழ் மந்திரங்களை மக்களுக்கு வழங்கிட வழிகாட்டியாக விளங்கியிருக்கிறார்கள் என்ற கூற்றும்

மனிதர்கள் தங்கள் வாழ்வின் பொற்காலம் பற்றி அறிய அவர்களுக்கு முன் அறிவிப்புக்களை, நடக்க இருப்பது பற்றி முன்கூட்டியே தெரிவிக்க ஐந்திரம் என்ற ஐந்து வகை கலைகளை உருவாக்கி உள்ளார்கள் சித்தர்கள் என்ற கூற்றும்,

இவற்றிற்கெல்லாம் மேலாக இத்தகைய அரிய செயல்களைச் செய்யும் சித்தர்களாக உருவாக, மானிடரான நம்முடைய ஆள்வினை, ஊழ்வினை, விதியின் அடிப்படையில் தரத்தையும், திறத்தையும் புகுத்தி ஞானத்தைத் தந்து சித்தர்களாக்கிட அரும்பெரும் பணியைச் செய்கிறது பதினெண் சித்தர் மடம் என்ற கூற்று எல்லோரையும் கவரக் கூடிய ஒன்று. ஏனெனில் இன்றைக்கு கடவுள் யார்? கடவுளுக்கும் நமக்கும் என்ன தொடர்பு? அவர் கருப்பா? சிவப்பா? என்ன சாப்பிடுவார்? குட்டையானவரா? உயரமானவரா? பருமனானவரா? என்று கேட்கும் இக்காலத்தில் "கட + உள்" = உள்ளத்தைக் கடந்தவன் கடவுள்; ஒரு மனிதனின் ஆன்மா முத்தி நிலை பெற்று அவன் கடவுளாகும் விதம் எப்படி? அக்கடவுளையே அதாவது அந்த ஆன்மாவை முத்தி நிலை பெறச் செய்யக் கூடிய சித்தராவது எப்படி? என்று விளக்கி உரைக்கிறது இந்நூல்.

"சித்தன் போக்கே சிவன் போக்கு" என்ற பழமொழி ஒன்று உண்டு. இந்தப் பழமொழியை விளங்கக் கூறும் வண்ணம் சித்தனின் பின்னால் கடவுள்களே வருகிறார்கள். அக்கடவுள்களை உருவாக்கக் கூடிய சித்தர்களை யாம் உருவாக்கித் தருகிறோம். "வாருங்கள் மானுடர்களே உங்களைச் சித்தராக்குகிறோம்" என்று அழைக்கும் ஒரு "மகா ஞானி", "எல்லாம் வல்ல சித்தர்", "இராசயோகி", "சித்தர் கருவூரார்", "ஞானாச்சாரியாரின்" இந்த அழைப்பு மெய்ஞ்ஞானத்தின் உச்சநிலையை, இவரது ஆழ்ந்த முத்தி நிலையை பிரதிபலிக்கிறது. எனவே, எல்லோரும் இந்நூலை வாங்கிப் படியுங்கள். படிப்பதோடு மட்டுமின்றி சித்தனாக பயிற்சி நிலையைப் பெற்று மாபெரும் சித்தராக வேண்டும் எனக்கூறி, பதினெண் சித்தர் மடத்தின் மடாதிபதி, பீடாதிபதி, சித்தர் கருவூரார் வாழ்க எனக் கூறி எமது உரையை முடிக்கின்றேன்.

# முன்னுரை:-

1) பதினெண்சித்தர்கள் உலக மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ்வதற்காக அருளியதுதான் “இந்துமதம்” எனப்படும் “சீவநெறி”. இந்தச் சீவநெறி என்ற சொல்லே சிவநெறியாகத் திருத்தம் பெற்றது. இந்தச் ‘சிவநெறியே’ காலப் போக்கில் ‘சைவநெறி’, ‘சைவ சித்தாந்தம்’ என்றாயிற்று.

2) இளமுறியாக் கண்டம் (நிலப்பகுதி முழுமையாக உறுதிப்படாமல் இருந்த கண்டம். அதாவது புதைமணல், சதுப்பு நிலம், ... முதலியன மிகுதியாக இருந்த கண்டம்) எனப்படும் முதல் நிலப்பரப்பில்; அனாதி சிவன்கள், ஆதிசிவன்கள் உருவாக்கியதுதான் சைவநெறி, சைவ சித்தாந்தம், சிவநெறி, சீவநெறி..... எனப்படும் மூலமதம், முதல்மதம்.

3) ஆதிசிவன்களின் செயல் பாடுகளால் அழகான, அமுதான..... என்று (1359) ஆயிரத்து முன்னூற்று ஐம்பத்தொன்பது பொருள்களைக் குறிக்கும் “இந்து” என்ற சொல் உருவாயிற்று. இந்தச் சொல்லே உலக மதங்களின் கருவாக, குருவாக அடிப்படையாக அமைந்தது.

4) இளமுறியாக் கண்டம் படிப்படியாக மூன்று கடல் கோள்களால் சிதைந்து; இன்றுள்ள ஐந்து பெரும் கண்டங்கள் உருவாயின. இதேபோல் பல மொழிகளும், பல மதங்களும், பல இனங்களும், பல்வேறு வகையான பண்பாடுகளும், நாகரீகங்களும் தோன்றின. இருந்த போதிலும், உலகம் முழுவதும் உள்ள மொழிகளுக்கும், இனங்களுக்கும், பண்பாடுகளுக்கும், நாகரீகங்களுக்கும், மதங்களுக்கும் ஒற்றுமைகள் இருக்கின்றன. இந்த ஒற்றுமைகள்தான்; இளமுறியாக் கண்டமே! அனைத்துக்கும் தாயாக, கருவாக, குருவாக இருக்கின்றது என்ற பேருண்மையை விளக்குகின்றன.

5) இவற்றை எண்ணிப் பார்த்துத்தான் இன்றைக்கு “உலகச் சகோதரத் தத்துவம்”, “உலக அமைதி”, “உலகச் சமாதானம்”, “உலக ஆன்மநேய ஒருமைப்பாடு” ... என்ற கொள்கைகளை நிறைவேற்றும் வல்லமை தமிழ்மொழிக்கும், தமிழர்களுக்கும் தமிழரின் இலக்கியம் பண்பாடு, நாகரீகம் முதலியவற்றிற்கும்தான் உண்டு என்ற உண்மையை நான்குயுக நாயகம் அறிவிக்கிறார்.

ஆனால் தமிழ்மொழி மந்திரங்கள் ஓதப்படாததால் கோயில்களில் உள்ள கடவுள்களின் அருளாட்சி முழுமையற்று நிறைவற்றுப் போய்விட்டது. இதனால்தான் இன்று வாழும் பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரார் அனைத்துக் குறைபாடுகளை நீக்கிட, அருளாட்சி முன்னேற்றக் கழகம் ஒன்றைத் தோற்றுவித்துச் செயல்படுகிறார். இந்த அ.மு.க.வின் மூலம்தான் நமது மானுட வாழ்வில் இருக்கின்ற அருளுலக வெறுமைகளும், வறுமைகளும் அகற்றப் படப் போகின்றன. அதற்கு நாம் நமது மத வரலாற்றை ஆரம்பக் காலத்திலிருந்து ஆராய்ச்சி செய்து செயல்பட்டிட வேண்டும். நமது செயல்களே வருங்காலத்தில் அருளாட்சியின் விழிச்சி நிலைகளையும், செழிச்சி நிலைகளையும் உயர்ச்சி பெற்றிடச் செய்யும்.

6) அதாவது கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டத்தில் அனாதி சிவன்களும், ஆதி சிவன்களும் அருளிய தமிழ் மொழியும், தமிழர் வாழ்வியலுமான இந்துமதம்தான் மானுட வாழ்வை மறுமலர்ச்சி அடையச் செய்யும். ஆனால், இந்துமதம், ‘இந்து’ என்ற சொல் காலப்போக்கில் தோன்றிய பல ஞானிகளின் பெயர்களால் தோன்றிய மதங்களால் மறைந்து, மங்கிப் போயிற்று. இந்நிலை மாற தமிழ்மொழியில் உள்ள பொருளாழ மிக்க ‘இந்து’ என்ற சொல்லால்தான் தமிழின ஒற்றுமை, இந்தியாவிலுள்ள அனைத்து இனங்களின் ஒற்றுமை, உலக முழுதுமுள்ள உலக இனங்களின் ஒற்றுமை உருவாக்கிட முடியும்.

7) இவற்றை யெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் உலக நன்மைக்காகப் பதினெண் சித்தர்களால் உருவாக்கப் பட்ட இந்துமதம் மீண்டும் புத்துயிர்ப்புச் செய்யப் பட்டு; தமிழகத்திலும், இந்தியா- விலும், உலகிலும் அருளாட்சி அமைத்திட முயற்சிகள் மேற்- கொள்ளப் பட்டுள்ளன. இவற்றை எண்ணிப் பதினெண் சித்தர் மடமும், பீடமும் ஆற்றி வரும் பணிகளில் பங்கு பெறுங்கள்; அல்லது, உங்களுடைய மேலான ஆதரவுகளையும், உதவிகளையும் வழங்குங்கள்.

8) இந்த உலகில் உள்ள சிறிய, பெரிய நாடுகள் எல்லாம் மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று, மதப்பற்று என்று;

தங்கள் தங்களுடைய பண்பாட்டையும், நாகரீகத்தையும் பாதுகாத்துக் கொள்ளுகின்றன. ஆனால், இந்தியாவும், தமிழ்நாடும் மேற்படித் தனித்தன்மையைப் போற்றிப் பேணிப் பாதுகாக்கத் தயாராக இல்லை. இத்துடன் மட்டுமின்றி இந்தியாவும், தமிழ்நாடும்தான் இம்மண்ணுக்குரிய பண்பாடு, நாகரீகம், மொழி, இனம், மதம்.... முதலியவற்றைக் காப்பாற்றத் தவறி விட்டன. இன்னும் பச்சையாகச் சொல்லப் போனால்; அரசியல் ஆதாயம் தேடித் தமிழக அரசியல்வாதிகளும்; இந்திய மத்திய அரசாங்கத்தில் பங்கு பெறும் அரசியல் வாதிகளும் மேற்கூறிய அனைத்தையும் நலிவுபடுத்தியும், இழிவுபடுத்தியும், துரோகம் செய்தும் சுயநல அரசியல்வாதிகளாக வாழுகிறார்கள்.

9) இந்த நிலை தொடர்ந்து நீடித்தால் இந்தியப் பண்பாட்டுக்கும் நாகரீகத்துக்கும், இனவுணர்வுக்கும், மொழிப்பற்றுக்கும், மதத்துக்கும்..... அடிப்படையான கருவான, குருவான ... தமிழ்மொழிக்கும், தமிழ்ப் பண்பாட்டுக்கும், தமிழ் நாகரீகத்துக்கும், தமிழர் மதமான இந்து மதத்துக்கும் (சீவ மதம் = சைவமதம்) உரிய தனித்துவத்துக்கும், சிறப்புக்கும், ஆற்றலுக்கும் சிதைவு ஏற்படும்! சீரழிவு ஏற்படும்! அதனால் தமிழர்களின் உலக ஒற்றுமை, உலக ஆன்ம நேய ஒருமைப்பாடு, உலகச் சமத்துவம், உலகச் சகோதரத்துவம், உலக அன்பு, உலக அமைதி, உலகச் சமாதானம்.... முதலிய உயரிய குறிக்கோள்களுக்குத் தாயகமாக விளங்கும் தமிழும், தமிழர் வாழ்வியலும் பெருமளவில் பாதிக்கப்படும். அதனால் தமிழர் மதமான சித்தர் நெறி என்னும் (சைவநெறி) சீவநெறி செயலிழக்க நேரிடும். எனவே, தமிழக அரசியலிலும், மெய்யான தமிழ்மொழிப் பற்றும், இனப்பற்றும், நாட்டுப்பற்றும், இனப்பற்றுக்குரிய பண்பாட்டுப் பிடிப்பும், நாகரீகப் பற்றும், ஆன்மீகப் பற்றும் காப்பாற்றப் பட்டேயாக வேண்டும். இதற்காகப் போலியான அரசியல் வாதிகளையும், மதவாதிகளையும், கலைஞர்களையும் ஒதுக்கிட, மறுத்திட, வெறுத்திட, எதிர்த்திடத் தயாராக வேண்டும். அப்பொழுதுதான், நமது தனித் தன்மைகளும், உலகைக் காத்திடவும் வல்லமை பெற்ற தமிழர்களின் சாதனைகளும், போதனைகளும் நிலையாகச்

செயல்பட்டிடல் வேண்டும். அதற்குப் பதினெண் சித்தர்கள் அருளும், அரவணைப்பும், வழிகாட்டலும் தேவை!! தேவை!! தேவை!!

10) இன்றைக்குரிய சாதிப் பிரிவினைகளுக்குச் சித்தர்களின் வரலாறுகளும், வாழ்வியல்களும், சமுதாய சமயச் சிந்தனைகளும்தான் உதவிட முடியும். 'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற மூதுரை; பதினெண்சித்தர்கள் தோற்றுவித்திட்ட கோயில்களின் அருமை, பெருமையும், அரிய பயனும் தெள்ளத் தெளிவாகத் தெரிகின்றன. எனவேதான், சித்தர்கள் கோயில் கட்டும் விதம், கோயில் புதுப்பிக்கும் நெறிமுறைகள், பூசைமொழி, பூசைவிதி, திருநாள் கொண்டாடும் நெறிமுறை, கோயில் குடமுழுக்கு விழா.... என்றிப்படிப் பல நூல்கள் எழுதி யருளி யுள்ளார்கள்.

11) காலப்போக்கில் கோயிலில் மூலக் கருவறையில் எழுந்தருளியிருக்கும் கடவுள்களின் அருளை மானுடர் பெற்றுக் கொள்வதற்குரிய அரிய பூசைமொழிகள், பூசை விதிகள், வழிபாட்டின் நுட்பமான நெறிமுறைகள் எல்லாம் சிறிது சிறிதாக மறைக்கப் பட்டு விட்டன; மறக்கப் பட்டு விட்டன. அதனால், பொதுமக்களில் கணிசமானவர்கள் கோயிலுக்குப் போகும் பழக்க வழக்கங்களை ஒதுக்கிடவும், புறக்கணிக்கவும், மறுக்கவும் ... ஆரம்பித்து விட்டார்கள்.

12) பதினெண்சித்தர்களும், நாற்பத்தெட்டு வகைச் சித்தர்களும் தோற்றுவித்த கோயில்களில் பெரும்பாலானவை பொதுமக்களால் போற்றிப் பேணிப் பாதுகாக்கப் படுவது..... குறையலாயிற்று. எனவே, கோயில் மூலக் கருவறையிலிருந்த தெய்வங்கள் எல்லாம் ஞானிகள், மகான்கள், இருடிகள், முனிவர்கள்.... முதலியவர்களிடம் சென்று தங்கிச் செயல்படலாயினர். இதனால் தொன்மையான கோயில்கள் அருளிழந்து, இருளடைந்து, காட்சிப் பொருள்களாகி விட்டன. பத்தியாளர்களும் கூட 'வீட்டிலேயே சாமி கும்பிட்டால் போதும்' என்ற முடிவை எடுக்க நேரிட்டது.

13) இவற்றின் விளைவாக ஆங்காங்கே ஒருசில ஊர்களில் உள்ள கோயில்களில் கூட்டங்கள் நிறைந்து வழியலாயின. பல கோயில்களில் ஒருவேளைப் பூசை

நடப்பது கூட அரிதாகி விட்டது. கணிசமான அளவு கோயில்கள் பாழடைந்து பூசையே இல்லாமல் போய்விட்டன.

14) இந்நிலைக்குக் காரணம் என்ன? அதாவது, சில கோயில்களுக்கு மட்டும் உண்டியலில் பல நூறாயிரக் கணக்கில் வருமானம் இருக்கின்றது. அதே சமயம் பல கோயில்களில் திருநாள், திருவிழாக் காலங்களில் மட்டுமே சில நூறு ரூபாய்கள் வருமானம் இருக்கின்றன. ஏன், இந்த வேறுபாடு? எதற்காக இந்த வேறுபாடு?! ... என்று சிந்தனை செய்திட வேண்டும். அப்பொழுது தான் நம் நாட்டில் உள்ள கோயில் கருவறைகளில் உள்ள குடும்ப ஆண்டவர்கள், குலதெய்வங்கள், ஊர்த் தேவர் தேவதைகள், நாட்டுக் கடவுளர்கள் எனப்படும் நான்கு வகைப்பட்ட அருளாட்சியினருக்கும், மக்களுக்கும் இடையில் மீண்டும் வளமான, வாளிப்பான, வலிமையான, தெளிவான நல்ல அறிமுகம், புரிமுகம் ஏற்பட்டிடும்.

15) இதற்காகப் பதினெண் சித்தர் பீடாதிபதிகள் பல்வேறு பெயர்களில் பல்வேறு நிறுவன நிர்வாகங்களைத் தோற்றுவித்தும், ஏற்கனவே ஆதிசிவனார் தோற்றுவித்த "அருளாட்சிக் கழகத்தை" மையமாக வைத்தும் செயல்படுகிறார்கள்.

16) அதாவது ஆதிசிவனார் இம் மண்ணுலகில் அருள்நெறி பிழைக்கவும், தழைக்கவும், அருளாட்சிக் கழகத்தைப் படைத்தார்கள். இக்கழகத்தில் இடம் பெறுபவர்கள் பின்வருமாறு:-

1. எட்டு இலட்சத்து எண்பத்து நாலாயிரத்து எழுநூற்று முப்பத்தாறு வகைக் கடவுள்கள் (8,84,736)
2. முப்பத்து மூவாயிரம் கோடி தேவர்கள் (33000,00,00,000)
3. நாற்பத்தெட்டாயிரம் கோடி இருடிகள் (48000,00,00,000)
4. ஆயிரங்கோடி தேவதைகள் (1000,00,00,000)
5. தொண்ணூற்றாறாயிரம் கோடி கணங்கள் (96000,00,00,000)
6. நூற்றெட்டாயிரம் கோடி முனிவர்கள் (108000,00,00,000)

என்று ஆறுவகைப் பட்ட அருளுலகத்தவர்களைப் பட்டியலிட்டு வழங்கியுள்ளார்.

17) இப்படிப்பட்ட அருளுலகத்தவர்களை அண்டபேரண்டங்களில் இருந்து கொண்டு வந்து குமரிக் கண்டம் என்ற இளமுறியாக் கண்டத்தில் அருளாட்சிக் கழகத்தை

நிறுவினர். இவற்றிற்குரிய அருளாட்சி அலுவலக நிலையங்களாக,

1) 108 வகைத் திருப்பதிகள்
2) 243 வகை சத்தி பீடங்கள்
3) 1008 வகை சீவாலயங்கள்
4) 48 வகைக் கருவறைகள்
5) 48 வகைப் பட்ட வெட்டவெளிக் கருவறைகள்
6) 48 வகைப்பட்ட வழிபாட்டு நிலையக் கருவறைகள்
7) 48 வகைப்பட்ட கோயில் மூலக் கருவறைகள்

என்று ஏழுவகைப்பட்ட அலுவலகங்களை உண்டாக்கி அருளாட்சிக் கழகத்தின் ஆட்சியை வரைமுறைப் படுத்திட்டார்.

18) இப்படி இந்த உலகில் முதன்முதலில் தோன்றிய பெருநிலப் பரப்பில் சித்தர்களின் தாய்மொழியும் அண்டபேரண்டங்களை இணைக்கும் மொழியும் இம்மண்ணுலகின் அருளாட்சி மொழியுமாகிய அமுதச் செந்தமிழ் மொழியில் பூசைகளைப் பற்றிய அனைத்து வகையான தத்துவங்களையும், தத்துவ நெறிமுறைகளையும் அனுபவப் பூர்வமான சித்தாந்த செயல் நடைமுறைகளையும் உண்டாக்கினர்.

19) இதனால்தான் தமிழ்மொழி இந்த உலகில் உள்ள எல்லா மொழிகளையும் ஈன்றெடுத்திட்ட தாய்மொழியாகும். அதாவது, அனாதிசிவனும், ஆதிசிவனும் இந்த உலகில் உள்ள அனைத்து வகையான மதங்களுக்கும் உரிய அருளுலகத்தவர்களையும், பூசை விதிக்குரிய பூசை மொழிகளையும் தமிழ்மொழியில் வழங்கி உள்ளனர். காயந்திரி மந்திரங்கள்; உடலைப் பக்குவப் படுத்துவதற்கு என்று அண்டபேரண்டம் அனைத்திலும் உள்ள அருளுலகத்தவர்களை வரவழைத்துப் பூசை செய்வதற்கு உரிய மந்திரம் ஆகும். குறிப்பாக உலகியலில் உள்ள மனிதர்களில் யார் யாருக்கு ஊழ்வினையாலும், விதியினாலும், பயிற்சி முயற்சியாலும்..... அருளுலக யோகத்தாலும், பத்தியாலும், சத்தியாலும் அருளாளராகத் தேர்ச்சி பெறக் கூடியவர்களை அவரவர் விருப்பப்படி காயந்திரி மந்தரம், மந்திரம், மந்திறம், மாந்தரம், மாந்தரீகம் எனும் ஐந்து வகைப்பட்ட காயந்திரிகளை ஓதுவிக்க அருளாணை வழங்கினர்கள்.

20) இப்படி ஐந்து வகைப்பட்ட பூசை முறைகளை அருட்கொடை

வள்ளலாகிய பதினெண் சித்தர் பீடாதிபதியும் மடாதிபதியுமாகிய ஆதிசிவனுர் அவர்கள் நேரடியாகவே குறிப்பிட்ட பூசைமொழிகளேயும், பூசை விதிகளேயும், பூசைக்குரிய தத்துவங்களேயும், பூசைக்குரிய நடைமுறைச் சித்தாந்தங்களேயும் மறைகளாக பாரம்பரியமாகப் பாதுகாத்திடும் படியான ஏற்பாடுகளே செய்து வைத்துள்ளார். சான்ருக காயந்திரி மந்தரம், மந்திரம், மந்திறம் என்ற மூன்று வகைப்பட்ட பூசைமொழிகளேத் தவிர காயந்திரி மாந்தர, மாந்தரீகம் என்ற இரண்டையும் பத்திநிலே, சத்திநிலே, சித்திநிலே பெற்றுச் சித்தராகிடும் நிலே பெற்றவர்கள் மட்டுமேதான் இந்தக் காயந்திரி மாந்தர மாந்தரீகங்களேப் பயன்படுத்தலாம் என்ற விதியை வகுத்துள்ளார்.

21) இதேபோல் கருவாக்கு, கருவாக்கியம், கருவாசகம், குருவாக்கு, குருவாக்கியம், குருவாசகம், திருவாக்கு, திருவாக்கியம், திருவாசகம், தருவாக்கு, தருவாக்கியம், தருவாசகம், அருள்வாக்கு, அருள் வாக்கியம், அருள்வாசகம், மருள்வாக்கு, மருள்வாக்கியம், மருள்வாசகம் எனும் பதினெட்டுக்களேயும்; அத்தரம், அத்திரம், அத்திறம், சாத்தரம், சாத்திரம், சாத்திறம், சூத்தரம், சூத்திரம், சூத்திறம், வேத்தரம், வேத்திரம், வேத்திறம், நேத்தரம், நேத்திரம், நேத்திறம், தோத்தரம், தோத்திரம், தோத்திறம் எனும் பதினெட்டுக்களேயும் குறிப்பிட்ட முயற்சி, பயிற்சி, தேர்ச்சி, முதிர்ச்சி உடையவர்கள் மட்டும்தான் இவற்றைக் கற்கலாம் என்ற விதி செய்யப்பட்டு இருக்கிறது.

22) இதைப்போலவே குருபத்தியில் சிறந்து விளங்கி குருவின் நம்பிக்கைக்கும், அன்புக்கும், ஆதரவிற்கும் உள்ளாகி குருவழி வாரிசுகளாக மாறுகிறவர்கள் மட்டுமே கற்பதற்கு என்று நேமம், இணேநேமம், துணே நேமம், நியமம், இணே நியமம், துணே நியமம், நிடதம், இணே நிடதம், துணே நிடதம், நீதி, இணே நீதி, துணே நீதி, நிட்டை, இணே நிட்டை, துணே நிட்டை, விதி, இணே விதி, துணே விதி எனும் பதினெட்டுக்களேயும் உரிய பக்குவங்களேப் பெற்றவர்கள் மட்டுமே ஓதி உணரலாம் என்ற சட்டதிட்டக் கட்டுப்பாட்டை உருவாக்கியுள்ளனர் சித்தர்கள்.

23) இப்படி சித்தர்கள் தங்களுடைய ஞானம், அகஞானம், புறஞானம், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் எனும் ஐந்தினையும் உலக மக்கள் அனைவரும் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே பல பகுப்புக்களாக, தங்களுடைய சாதனைகளை வெளியிட்டு உள்ளார்கள். இப்படி அரும் பாடுபட்டு சித்தர்கள் தங்களுடைய சாதனைகள் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காக மானுடரின் சிந்தைத் தெளிவையும், நெஞ்சுரத்தையும், உணர்வுக் கட்டுப்பாட்டினையும் பெற்றுள்ளவர்களையே தங்களுடைய மாணுக்கராகத் தயாரிக்கிருர்கள். இவர்கள் மூலம் தங்கள் செயல் நிலைகளை செயல் படுத்துகிருர்கள்.

24) இவர்களுக்கெல்லாம் மூலாதாரமாகச் செயல்படும் பதினெண் சித்தர்கள் 48 வகைச் சித்தர்களுக்கும் மூலாதாரமாக விளங்குகிருர்கள். இப் பதினெண் சித்தர்கள் தங்களுடைய தலைமைக் குருபீடமாக பதினெண் சித்தர் பீடாதிபதிகள் தோன்றுகின்ற காலங்களில் முழுமையாகச் செயல்படுகிருர்கள். இதற்காக பதினெண் சித்தர் பீடாதிபதிகள் தங்கள் தங்களின் காலங்களில், அருளூறு அமுதத் தமிழில் அண்ட பேரண்டங்கள் அனைத்திலும் இருக்கின்ற இந்து வேதாந்தம், இந்து சித்தாந்தம், இரண்டும் கலந்த இந்து மதம் முதலியவைகளைப் புதுப்பித்து மக்களுக்கு பயன் படும்படி செய்கிருர்கள்! இதற்காக பதினெண் சித்தர் மடம், பீடம், இந்து மறுமலர்ச்சி இயக்கம், இந்துவேத முன்னேற்றக் கழகம், அருட்பணி விரிவாக்கத் திட்டம் என்ற ஐந்தையும் தோற்றுவித்துச் செயல்படுகிருர்கள்.

25) இப்படிப்பட்ட ஐந்து வகையான நிறுவன நிர்வாகங்களால் அருளாட்சி அமைக்கிருர்கள். இந்த அருளாட்சி, தனிமனித அருளாட்சி, குடும்ப அருளாட்சி, சமுதாய அருளாட்சி, நாட்டு அருளாட்சி என்ற நான்கு நிலைகளில் செயல்பாடுகளை நிகழ்த்துகிருர்கள். இந்த அருளாட்சிகளை ஒழுங்கு படுத்துவதற்காக அருளாட்சிக் கழகம் என்ற ஒன்றினை உருவாக்குகிருர்கள். இதனை முழுமுதல் தலைவரான ஆதிசிவனுர் வழங்கினுர். அந்தத் தலைமைக்கு வாரிசாக முருகப் பெருமான் தோன்றிட்டார். வாழையடி வாழையென வாரிசுகள் தோன்ருததால் சிவபெருமானே

"அருளாட்சி முன்னேற்றக் கழகம்" என்ற ஒன்றைத் துவக்கி சட்டதிட்டக் கட்டுப்பாடுகளை தளர்த்தி; மூலப் பதினெண் சித்தர்களின் ஒருவரான, சித்தர் கருவூருரை பதினெண்சித்தர் பீடாதிபதிகளாக, மடாதிபதிகளாக ஆக்கினர். அதன்படியே, அருளாட்சிக் கழகத்தின் வாயிலாக இன்று வாழும் சித்தர் கருவூரர் ஞானச்சாரியார் 12வது பதினெண் சித்தர் பீடாதிபதி அருளாட்சி முன்னேற்றத்திற்காக செயல்படுகிறார். எனவேதான், இன்றைய சூழ்நிலையில் பதினெண்சித்தர்களின் அறிவுரைகளையும், அருளுரைகளையும் இவ் விரண்டின் சாதனைகளையும், அச்சாதனைகளால் விளைந்தனவற்றை போதனைகளாகவும் வழங்குகின்றார்.

26) சித்தர்களுடைய சாதனைகளும், போதனைகளும், பகுத்தறிவுப் போக்கில் விஞ்ஞானச் சூழ்நிலையில்தான் வழங்கப் பட்டிருக்கின்றன. எனவேதான், பதினெண் சித்தர்களுடைய வேதம், வேதாந்தம், சித்தம், சித்தாந்தம் எனப்படுவன. அறிவியல் சாதனைகளாகவே ஏற்றுக் கொள்ளத் தக்கவை. ஒரு சில சித்தர்களின் வாக்குகளும், வாசகங்களும் நாத்திகத்தை வளர்ப்பன போன்று தெரியும். ஆனால், அவற்றை நுட்பமாக நுணுக்கமாக ஆராய்ந்தால்தான் அவைகள் எல்லாம் ஆத்திகக் கருத்துக்களே என்பது புரியும். மேலும், சித்தர்கள் "வாருங்கள் மானிடரே! உங்களை கடவுளாக்குகிறோம்" என்ற அறிவிப்பை அழைப்பாக விடுக்கிறார்கள்.

27) சித்தர்களின் அறிவிப்பு அழைப்பு மெய்யானவை என்பதற்கேற்ப ஆதியில் அண்ட பேரண்டங்களில் இருந்து இம் மண்ணுலகிற்கு வந்த ஆதிசிவன் தமது அருட்கொடையாக மனிதர்களைக் கடவுளாக்கும் பூசைமொழியை அருளியுள்ளார்.

*(இந்தப் பூசைமொழியை இந்தக் கட்டுரையின் இறுதியில் காணலாம்.)*

28. சித்தர்கள் மானுடர் மீது அளப்பரிய அன்பையும், இரக்கத்தையும், காக்கும் விருப்பத்தையும் உடையவர்களாக இருக்கிறார்கள். எனவேதான், மனிதர்களை அவரவர் நெஞ்சத்திற்கும், சிந்தைக்கும் ஏற்ப பல்வேறு பிரிவுகளாக பிரித்து அவரவர் தரத்திற்கும், திறத்திற்கும் ஏற்ப அருளையும், அருட் கலைகளையும் அருளிக் காப்பாற்று-

கிருர்கள். இதைப்பற்றி எண்ணிப் பார்க்கத் தெரியாத அப்பாவிகளே மிகுதியாக வாழுகிருர்கள். இருப்பினும் சித்தர்கள் தக்காரைத் தேர்ந்தெடுத்து அக்கறையோடு அவர்கள் மூலம் மானுடர்களுக்கு பத்தி, சத்தி, சித்தி, முத்தி முதலியவை கிடைக்கும் வண்ணம் செய்கிருர்கள்.

29. அருட்சத்தியை தவருகப் பயன்படுத்தக் கூடியவர்கள் மந்திரவாதிகளே ஆவார்கள்! இம் மந்திரவாதிகள் சித்தர்களின் பூசைமுறைகளே பயன்படுத்தி சாதாரண மக்களனைவருக்கும் தொல்லைகளேயும், தோல்விகளேயும், இழப்புக்களேயும், துன்பங்களேயும், துயரங்களேயும், நோய்நொடிகளேயும் உண்டாகும் படி செய்து அருளுலகுக்கு அழிவுகளேயும், இழிவுகளேயும், ஆருத பழிகளேயும் உண்டாக்குகிருர்கள்.

30. மந்திரவாதிகளின் இந்த ஈவு இரக்கமற்ற கொடிய செயல்களால் அருளுலகப் பத்தியாளர்கள், சத்தியாளர்கள், சித்தியாளர்கள், முத்தியாளர்கள் அருள் வழங்குவதைக் கூட மக்கள் தவருக நினைத்து அருளாளர்களே வெறுக்கவும், மறுக்கவும், எதிர்க்கவும், இழித்து பழித்துப் பேசவும் அதிக அளவில் வளர்ந்து விட்டனர். அதாவது யாரை எடுத்தாலும் போலி சாமியார், மந்திரவாதி என்று கேலி செய்வதும், ஏளனம் செய்வதும் அதிகமாகி விட்டன. இதனுல் நல்ல அருளாளர்கள் சிறந்த பத்தியாளர்-கள் முதலியோர் அன்பு வழியில், அறவழியில், நேர்மையான வழியில், நேர்வழியில் மக்களோடு தொடர்பு கொண்டு அருள்நெறியைப் பரப்ப முடியாமல் போகின்றது. மேலும் ஒரு சில சாமியார்கள் துறவி வேடத்தில் உலாவி பல்வேறு குற்றங்களேச் செய்து விடுகிருர்கள். இதற்காக எல்லா சாமியார்களேயும், துறவிகளேயும் மக்கள் பயன் படுத்திக் கொள்ள முடியாமல் போய்விடுகிறது. இவற்றை யெல்லாம் அகற்றி அருளாளர்களே மக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளும் நற்காலம் உருவாக வேண்டும். அதுவே மனித வாழ்வின் பொற்காலம். சித்தர்கள் மனித வாழ்வுக்குத் தேவையான முன் அறிவிப்புக்களே வழங்கிடும் பணியைத் தெளிவாக ஐந்திரம் என்ற ஐந்து வகைப்பட்ட கலைகளாக அருளியுள்ளார்கள். அவை 1. பிறப்பியல் (சாதகம்), 2. வரியியல் (கைரேகை), 3.

பெயரியல் (பேர் ராசி), 4. அங்கவியல் (உறுப்பிலக்கணம்), 5. மனையியல் (கட்டிடக் கலையியல் சாத்திரம்) இவைகளே ஐந்து வகையாகும். இதேபோல் அருளுலகத்தவர்களிடமிருந்து அருளைப் பெறுவதற்கு ஐந்தீ வேட்டல், முத்தீ ஓம்பலுடன், எண்வகை பூசைவிதிகளை, பூசைமொழிகளை அருளி உள்ளார்கள்.

31. இப்படி ஐந்தீ வேட்டல் என்பதற்கு ஐந்தீ வேட்டல் எனும் பூசைவிதிகள் 1.ஓகம் செய்தல், 2.ஓமம் செய்தல், 3.யாகம் செய்தல், 4.யக்ஞம் செய்தல், 5.வேள்வி செய்தல் என்று ஐந்து வகைப்பட்ட கலைகளாக அருளி உள்ளார்கள். முத்தீ ஓம்பல் என்பதற்கு 1.சூரியனை வழிபடுதல் (கந்தழி நிலை), 2.திங்களை (சந்திரனை) வழிபடுதல், 3.விண்மீன்களை வழிபடுதல் (கொடிநிலை) மூன்று வகைப்பட்ட கலைகளை அருளி உள்ளார்கள்.

32. இப்படி இயற்கையான பொருள்களை வழிபடுவதற்குரிய பூசை விதிகளையும், பூசை மொழிகளையும் அருளி உள்ளார்கள் பதினெண் சித்தர்கள். இப்படி உலகியலாக எளிமையான முறையில் பதினெண் சித்தர்கள் அருளியுள்ள இந்துவேத நெறிமுறைகள் சித்தர் நெறியான சீவநெறி முறைகள், சைவ சமய நெறிமுறைகள் எல்லோராலும் முறையாக ஓதி நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகிறது. அப்போதுதான் அவற்றின் மூலம் அரிய, பெரிய சாதனைகளைச் சாதித்து நன்மைகளை அடைய முடியும். இதற்காகவே, சித்தர்கள் அருள்யோகமுடைய மக்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களை அருளாளர்களாக்கி மக்களுக்குத் தொண்டு செய்யச் சொல்லுகிறுர்கள்.

33. நம் நாட்டில் கண்கவர் சிற்பங்களோடு விண்ணுயர்ந்த கோபுரங்களையும் உடைய கோயில்கள் தாராளமாக ஏராளமான இடங்களில் இருக்கின்றன. இவைகளைக் கட்டிய சித்தர்கள் இக்கோயில்களில் பூசை செய்யும் குருக்கல்கள், குருமார்கள், அருட்சினையாளர்கள், அருளாளர்-கள், அருளாளிகள், அருளாடு நாயகங்கள், ஓதுவார்கள், மந்திரிக்கும் பூசாறிகள், பிறப்பியல் சாத்திரியார்கள், வரியியல் சாத்திரியார்கள், அங்கவியல் சாத்திரியார்கள், பெயரியல்

சாத்திர்யார்கள், மனையியல் சாத்திரியார்கள், பல்வேறு வகையான இசைக் கருவியை இயக்கும் பல்லியத்தார்கள், நெடு -வங்கியத்தார்கள், இசைவாணர்கள், ... என்று வகை வகையான அருளாளர்கள், அருளாளிகள், அருளாடுநாயகங்கள், மருளாளர்கள், மருளாளிகள், மருளாடு நாயகங்கள் என்று வகைவகையான கலைஞர்கள் கோயில்களில் பணிபுரியும்படி ஏற்பாடு செய்திருந்தார்கள்! இப்படிக் கோயில்களில் அருளை மருந்தாகவும், விருந்தாகவும் வழங்கக் கூடிய கலைஞர்கள், சித்தர்களால் உருவாக்கப் பட்டு வாழையடி வாழையாக அருட்பணி செய்யும்படி செய்திட்டார்கள் சித்தர்கள். இதனால்தான் ‘கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்’ என்ற மூதுரையும் பிறந்தது.

34. அதாவது கோயிலை சித்தர்களின் செயலகங்களாக, அருளாட்சி நிறுவனங்களாக, பண்பாட்டுப் பெட்டகங்களாக, இந்துமதச் செயலகங்களாக, நிறுவன நிர்வாக அலுவலகங்களாக செயல்படும்படி செய்தனர் பதினெண் சித்தர்கள். இம்மட்டின்றி இந்துமதக் கருவூலங்களாகவும், கண்வழிக் கல்வி வழங்கும் காட்சி-யகங்களாகவும் சித்தர் மருத்துவச் சாலைகளாகவும், சித்தர் கல்விச் சாலைகளாகவும், சேவலோன் கலைப் பயிற்சிச் சாலைகளாகவும், நாட்டிய கவின்கலைச் சாலைகளாகவும் கோயில்கள் பயன்பட்டிட்டன. இவற்றிற்கும் மேலாக கோயில்கள், ஊர் மக்களின் ஆவணக் களரியாகவும், நீதி வழங்கும் மன்றங்களாகவும், கவி அரங்க-மாகவும், கலை அரங்கமாகவும், ஊராட்சி மன்றங்களாகவும், அரசாங்க அலுவலகங்களாகவும் செயல் படும்படிச் செய்தார்கள் சித்தர்கள்.

35. கோயில்கள் பற்றிய பேருண்மைகளை நிறைவாகவும், முறையாகவும் ஆராய்ந்து புரிந்து கொள்ளுபவர்கள் தாங்களும், உடனடியாக சித்தர்களாக மாற வேண்டும் என்ற விருப்பத்திற்கு உள்ளாவார்கள். எனவேதான் ‘வாருங்கள் எல்லோரும் சித்தராகலாம்’ என்ற தலைப்பில் சில பகுதிகளாக எழுதப்பட்ட பெரிய நூல்களிலிருந்து எல்லாரும் படித்தறிய வேண்டும் என்பதற்காக சிறுசிறு பகுதிகளை நூல்களாக்கி தொடர்ச்சியாக வெளியிட முன்வந்துள்ளது பதினெண்சித்தர்

மடம். இம் மடத்தின் மடாதிபதி-யாகவும், பொருளுலகின் பீடாதிபதியாகவும் செயல்படுகின்றார் ஞானச்சாரியார் சித்தர் கருவூரார். அதாவது அருளுலகின் மடாதிபதி-யாகவும், பொருளுலகின் பீடாதிபதியாகவும் செயல்படும் 'ஞானச்சாரியார்' சித்தர் கருவூரார் இந்த **'வாருங்கள் எல்லாரும் சித்தராகலாம்'** என்ற நூலின் இரண்டாம் பாகத்தை வெளி-யிடுகிறார்.



**காரனோடை சித்தர் கோயிலில் சமாது கொண்டருளும் பேரருட்கொடை வள்ளல் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞானச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள்.**

# மனிதரைக் கடவுளாக்கும் பூசைமொழி

1. கனல் காற்றுகிப் பனியாகிப் புனலாயுருகிக்
2. கல்லாய் மண்ணாய் மணலாய்ச் சேராகிப்
3. புல்லாய்ப் பூடாய்ச் செடி கொடியாய் மரமாகிப்
4. புழுவாய் பூச்சியாய் விலங்காய் பறவையாகி;
5. மனிதராய் இருடியாய் முனிவராய்ப் பட்டவராகி
6. அமரராய் ஆண்டவராய்த் தெய்வமாய்த் தேவராகி
7. இறையாய் உருத்திரராய் எல்லாவாய் ஐயீசுவரியாய்க்
8. கருத்தும் காலமும் கடந்த கடவுளாகித்
9. திருத்தம் வழங்கு தனிப் பெரும் பல்பொருளாகி
10. வானாகி விண்ணாகி ஆகாயமாகிக் ககனமாய்;
11. விசும்பாய் பரவெளியாய் பால்வெளியாய் நிறைந்து
12. பிண்டமாய், அண்டமாய், பேரண்டமாய், அண்ட பேரண்டமாகி;

13. அருவாய், அருவுருவாய், உருவ அருவாய், உருவாகித்

14. திசைகள் நான்காய் எட்டாய்ப் பதினாருகி

15. முப்பத்திரண்டாய், அறுபத்து நான்காய் விளங்கிடும் தத்துவமே!

16. கணக்கற்ற கோடிக் கடவுளராக வாழ்ந்தும்

17. கண்படைத்த மனிதரால் காணமுடியாத நிலையிலே

18. மெய்ப்பத்தரைக் காக்கும் நிறைமனத்தீரே!

19. வாய்மையாகத் தூயபத்தி செய்பவர்க்கே உய்வினைச்

20. சத்தியாக்கி சித்தியாக்கி முத்தியாக்கிச் சித்தாகிடும்

21. கோலங்கள் கோடி பல கொண்டருளு கடவுளரே!

22. எல்லோரும் எளிதில் எய்திட வாழும் எண்ணற்றோரே!

23. ஏதாவதொரு வழிபாட்டால் எப்படியும் உங்களில்

24. தோதாகச் சிலராவது கிடைத்திடுவீர் நம்புகிறோம்;

25. மனிதரோடு மனிதராய்த் தொண்டாற்றும் புனிதீர்!

26. தொழுகிறோம், வழிபடுகிறோம், வணங்குகிறோம், கும்பிடுகிறோம்;

27. எங்களையும் கடவுளாக்கிக் காத்து அருளுக!

ஆஓ! ஈஓ! ஊஓ! ஏஓ! ஐஓ! ஓஓ! ஃஓ!

கஓ! சஓ! டஓ! தஓ! பஓ! றஓ!

ஙஓ! ஞஓ! ணஓ! நஓ! மஓ! னஓ!

யஓ! ரஓ! லஓ! வஓ! ழஓ! ளஓ!

அஓ! இஓ! உஓ! எஓ! ஒஓ! ஔஓ!

அம்ஆம்! இம்ஈம்! உம்ஊம்!

எம்ஏம்! ஐம்ஐம்! ஒம்ஓம்!

ஔம்ஔம்! ஔம்ஔம்! ஔம்ஔம்!

ஃம் ஃம்! ஃம் ஃம்! ஃம் ஃம்!

***[குருவழி முறையாகப் பயிற்சி செய்தால் விரைவில் நிறைந்த பயன் கிடைக்கும்.]***

பதினெண் சித்தர்களுடைய பூசைமொழிகளான பதினெண்மையக் கணக்கு நூல்கள் ஆறும் செய்யுள், கவிதை, பாட்டு என்ற மூன்று வகை இலக்கிய நடைகளைப் பெற்றிருக்கின்றன. இவை சொற்செறிவும் எளிதில் மனப்பாடம் செய்வதற்கு ஏற்ற இனிய

இசைப்போக்கும் உடையவை. ஆனால், இவற்றிற்கு ஆரம்ப வேண்டுகோள்களும், நிறைவு வேண்டுகோள்களும், அருளுலக அறிவிப்பிற்குரிய ஒருவரி, இரண்டு வரி வாசகங்களும் மிகுதியாக உரைநடையிலேயே இருக்கின்றன.

பதினெண் சித்தர்களுடைய நூற்றெட்டுப் பூசைமொழி நூல்களில் எந்த நூலிலிருந்து எந்தவொரு பூசைமொழியை ஓதினாலும் சரி, திரும்பத் திரும்ப உரைத்தாலும் சரி அதுவே எல்லாவித பத்தி சத்தி சித்தி முத்தி முதலியவைகளைத் தந்துவிடும். இதற்குப் பெரும்பாலும் யாருடைய வழிகாட்டலோ வழித்துணையோ கூட இல்லாமல் அவரவர் பயிற்சியும் முயற்சியும் தொடர்ந்து ஆர்வமுடனும் நம்பிக்கையுடனும் நிகழ்ந்தாலே போதும்.

மனிதர்களில் விரல்விட்டு எண்ணக் கூடிய சிலர் எல்லா வகையான ஆசைகளையும் துறந்தும் மறந்தும்; தாங்கள் கடவுளைக் காணவேண்டும், கடவுளோடு உரையாடி உறவாடிக் கலந்து வாழ வேண்டும், தாங்களும் கடவுளாகவே ஆகிட வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். இப்படிப் பட்டவர்களுக்காக மட்டுமே எழுதப்பட்டதுதான் இந்த மனிதரைக் கடவுளாக்கும் பூசைமொழி என்ற ஒரே ஒரு பூசைமொழி. இது நூற்றெட்டுப் பூசைமொழிகளிலும் ஏதேனும் ஓரிடத்தில் முன்னால், பின்னால், நடுவில் நெடிய பல விளக்கங்களோடு செயல்சித்தாந்த விதி நெறி முறைகளோடு எழுதப்பட்டிருக்கிறது.

குறிப்பாக, இப்பூசைமொழிக்கு மட்டும் அண்டபேரண்டமாளும் சித்தர்களின் தொடர்புடைய அல்லது அவர்களிடம் பத்தியுள்ள குரு ஒருவர் வழிகாட்ட அல்லது வழித்துணையாக அமைந்திடப் பயிற்சி முயற்சி செய்தால் நன்று என்ற பரிந்துரை தரப்பட்டிருக்கிறது. மேலும், இப்பூசைமொழியைச் சித்தி செய்ய முயலுபவர்கள் அறிவு விழித்த நிலையிலேயே பழம் பிறப்புக்களோடும், மறு பிறப்புக்களோடும் அடிக்கடித் தொடர்பு கொள்ள நேரிட்டுப் பித்து நிலையை எய்திட நேரிடும் என்றும் குறிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இப்படி ஒரு பூசைமொழி பதினெண்சித்தர்களால்தான் வழங்கப்பட்டிருக்கிறது. இதனைப் பதினெண்சித்தர்களின் மெய்யான இந்துமதத்தினுடைய பூசைமொழியின் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

சென்னை - 11

14-5-86

# நான்குவகைப் பீடாதிபதிகளின் ஞான உலா

இந்துமதம் தோற்றுவிக்கப் பட்டு இன்றேடு (இந்த 1986 ஆண்டோடு) 43,73,087 ஆண்டுகளாகின்றன. இந்த நெடிய கால இடைவெளி கிரேதாயுகம், திரேதகா யுகம், துவாபர யுகம், கலியுகம் என்று நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டே அருளாட்சி நிகழ்த்தப்பட்டு வந்திருக்கிறது. [கிரேதகா யுகம் 17,28,00; திரேதகாயுகம் 12,96,000; துவாபரயுகம் 8,64,000; கலியுகம் 5,087]

அஞாதிசங்கராச்சாரியார், அஞாதிசிவாச்சாரியார், அஞாதி ஈசுவராச்சாரியார், அஞாதி பரமாச்சாரியார் என்று நான்குவகை ஆச்சாரியப் பீடாதிபதிகளின் முயற்சியாலும், மூலப் பதினெண் சித்தர்கள், மூலப் பதினெட்டாம்படிக் கருப்புகள், அஞாதிப் பதினெண் சித்தர்கள், அஞாதிப் பதினெட்டாம் படிக் கருப்புகள், தாத்தாக்கள், ஆத்தாக்கள், அம்மையப்பன்கள், .... முதலிய பலவகையினர் அருளாட்சிப் பணியில் ஈடுபட்டே இந்துமதம் எனும் சித்தர் நெறியை உருவாக்கினர்.

உருவாக்கப்பட்டு முழுமை பெற்ற இந்துமதம் செயல்படத் துவங்கிய காலத்தில் இருந்துதான் யுகக் கணக்கு ஆரம்பிக்கப் பட்டது. நான்கு யுகங்களிலும் நாற்பத்தெட்டு (48) பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றி அருளாட்சி நாயகமாகச் செயல்படும் திட்டம் உருவாக்கப் பட்டது.

**கருவழி ஆச்சாரியார்கள்:** 1. அத்திரி, 2. இத்திரி, 3. உத்திரி, 4. எத்திரி, 5. ஒத்திரி, 6. காத்திரி, 7. சாத்திரி, 8. தாத்திரி, 9. பாத்திரி, 10. நாத்திரி, 11. மாத்திரி, 13. வாத்திரி என்று பதின்மூன்று வகையினரும்,

**குருவழி ஆச்சாரியார்கள்**: 1. பத்தர், 2. பத்தியார், 3. போத்தர், 4.போத்தியார், 5. புத்தர், 6. புத்தியார், 7. முத்தர், 8. முத்தியார், 9. சீவன்முத்தர், 10. சீவன் முத்தியார், 11. அருவசித்தியார், 12. உருவசித்தியார், 13. அருவுருவசித்தியார் என்று பதின்மூன்று வகையினரும்,

**பதினெண்சித்தர் பீடாதிபதி வழி ஆச்சாரியார்கள்**:

1. அல்லாச்சாரியார்,

2. ஆண்டவராச்சாரியார்,
3. இயவுளாச்சாரியார்,
4. இறைமையாச்சாரியார்,
5. தெய்வீகாச்சாரியார்,
6. கடவுளாச்சாரியார்,
7. தேவாச்சாரியார்,
8. பட்டாச்சாரியார்,

... என்று நாற்பத்தெட்டு (48) வகையினரும் ... உலகெங்கும் தோன்றிச் சித்தர்நெறி எனும் இந்துமதத்தைப் பசுமையாகவும் பயனுள்ளதாகவும் வளர்ப்பார்கள். அதாவது, தனிமனிதர்களின் பெயரால் இம்மண்ணுலகில் பல மதங்கள் காலங்கள் தோறும் தோன்றினுலும், அவை இந்துமதம் எனும் ஆற்றின் கிளை ஆறுகளாக அல்லது இந்துமதம் எனும் ஆலமரத்தின் விழுதுகளாகத்தான் செயல்பட்டிடும். இதனை "எத்தனை யெத்தனை மதங்கள் தோன்றினுலும், அவை சித்தர் நெறி ஈன்றெடுத்த குழந்தைகளாகத்தான் இருக்கும் ...", இவ்வையகத்தில் வகைவகையான மதங்கள் காலங்கள் தோறும் தோன்றினுலும் அவை பதினெண் சித்தர்களின் இந்துமதம் எனும் கனிமலர்ச் சோலையில் பழுத்த கனிகளாகவும், பூத்த மலர்-களாகவுமே இருந்திடும் ..." என்ற குருபாரம்பரிய வாசகங்களால் அறியலாம்.

## எண்வகை ஆச்சாரியர்கள் மரபு:

தமிழினத்தில் மட்டுமே தோன்றித் தெய்வீகத் தமிழால் சித்தர் நெறியெனும் இந்துமதத்தை வளவளர்ச்சி செய்து அண்ட பேரண்ட அருளாட்சியைச் சீரான நிறுவன நிருவாக ஒழுங்கமைப்புப் பெறுவதற்காக எண்வகை ஆச்சாரியார்களை உருவாக்கினுர்கள், பதினெண்சித்தர்களும், பதினெட்டாம் படிக் கருப்புகளும்.

(1) சிவாச்சாரியார்கள்:- தோன்ற வேண்டிய 48 பேர்களும் தோன்றிவிட்டார்கள்.

(2) ஆதிசிவாச்சாரியார்கள்:- தோன்ற வேண்டிய 48 பேர்களும் தோன்றி விட்டார்கள்.

(3) ஈசுவராச்சாரியார்கள்:- தோன்ற வேண்டிய 48 பேர்களும் தோன்றி விட்டார்கள்.

(4) ஆதி ஈசுவராச்சாரியார்கள்:- தோன்ற வேண்டிய 48 பேர்களும் தோன்றி விட்டார்கள்.

(5) பரமாச்சாரியார்கள்:- தோன்ற வேண்டிய 48 பேர்களும் தோன்றிவிட்டார்கள்.

(6) ஆதிபரமாச்சாரியார்கள்:- தோன்ற வேண்டிய 48 பேர்களும் தோன்றி விட்டார்கள்.

(7) சங்கராச்சாரியார்கள்:- இதுவரை நாற்பது (40) சங்கராச்சாரியார்கள் தோன்றிவிட்டார்கள். இன்னும் மீதி யுள்ள எட்டு(8) சங்கராச்சாரியார்கள் தோன்ற வேண்டும்.

(8) ஆதிசங்கராச்சாரியார்கள்:- இதுவரை முப்பத்திரண்டு (32) ஆதி சங்கராச்சாரியார்கள் தோன்றி யுள்ளார்கள். இன்னும் மீதியுள்ள பதினாறு(16) ஆதிசங்கராச்சாரியார்கள் தோன்ற வேண்டும்.

**இதேபோல், நாற்பத்தேழு (47) தேவகுமாரர்கள் [ஈசுவரன் -> ஈசா -> ஏசா -> இயேசு], நாற்பத்தெட்டுத் தேவதூதர்கள் [நபிகள்], முப்பத்திரண்டு புத்தர்கள், இருபத்தேழு தீர்த்தங்கரர்கள் [மகாவீரர்கள்] தோன்றியுள்ளார்கள். இன்னும், ஒரே ஒரு தேவகுமாரன், பதினாறு புத்தர்கள், இருபத்தோறு தீர்த்தங்கரரகள் தோன்ற வேண்டும்.** இவர்களால் மறுமலர்ச்சி பெறும் கலியுகப் பகுதியை அருளாட்சி செய்வதற்காக முப்பத்தாறு (36) பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்ற உள்ளார்கள்.

இன்று மதமறுமலர்ச்சிக்காக அருளாட்சிப் பணியில் ஈடுபட்டுள்ள குவலய குருபீடம், அரசயோகி, குருதேவர், இந்துமதத்தந்தை, ஞானாச்சாரியார், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார், அருளாட்சி நாயகம் புரட்சிகரமாக நான்குவகைப் பீடாதிபதிகளின் ஞான உலா நிகழ ஏற்பாடு செய்துள்ளார். இவ்வரிய, பெரிய, சீரிய, அருளுலகச் செயல்திட்டத்தை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவர்களின் அருட் பார்வையாலும், அருளுரையாலும், அருள் வழங்கலாலும் மனித வாழ்வு இனிமையடையட்டும், புனிதம் பெறட்டும், நிறைவு காணட்டும், நலமுறட்டும்.

குருவும் திருவும் ஒன்றென
உணர்ந்திடு
குருவே அனைத்துக்கும்
வழியென உணர்ந்திடு
குருவே அருளுலக விழியென
உணர்ந்திடு
குருவே சித்திகளுக்கு
வழித்துணையென உணர்ந்திடு
குருவே போதனைகளின்
சாதனையென உணர்ந்திடு

# குருபாரம்பரியம் தரும் தேவகுமாரன் ஈசா (இயேசு) பற்றிய குறிப்பு

பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் காலம் கி.மு.100 முதல் கி.பி.150 வரை என்று மிகத் தெளிவாக வரையறை செய்யப்படுகிறது. இவர் வளர்த்த இம்மண்ணுலகின் 47வது தேவகுமாரனுகத் தோன்றிய செருசலத்து ஈசா (Jerusalem Jesus Christ) இவரிடம் ஒன்பது வயது முதல் 27 வயது வரை ஆக 18 ஆண்டுகள் பயிற்சிகள் பெற்ற போது 'சங்க இலக்கியங்களும், திருக்குறளும், திருவள்ளுவரின் நூல்களும், திருமூலரின் நூல்களும், சித்தர்களின் இலக்கியங்களும், மற்ற நவநாத சித்தர்களின் புராணங்களும், கதைகளும், காதைகளும், கவிதைகளும், கீதைகளும் முறையாகக் கற்றிட்டார்'

பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அமராவதியாற்றங்கரைக் கருவூரரின் அருளாணைப்படியும், குருவாணைப்படியும் செயல்படாததால்தான் 47வது தேவகுமாரனுன ஈசன் எனப்படும் ஈசா => ஏசா => இயேசு எனப் பெயர் பெற்ற ஏசுநாதர் சிலுவையில் மாண்டு, மீண்டு உயிர்த்தெழுந்தார். அப்படி உடலோடு உயிர்த்தெழுந்த ஏசு, தமிழகத்துக் கரூர் அமராவதியாற்றங்கரை வட்டாரத்தில் நெடுங்காலம் வாழ்ந்தார் என்பதால்தான் இவர் அடியார்களில் சிலர் இந்தியாவுக்கு வந்து தேடிக் கண்டுபிடித்து அவருடன் வாழ்ந்தனர். அவர்களில் ஒருவரே 'புனித தாமசு' (Saint Thomas) ஆவார். 48வது தேவகுமாரன் 'அந்திக் கிறித்து' (The Last Christ) தமிழகத்தில்தான் தோன்றுவார், தமிழினத்தில்தான் தோன்றுவார் என்று மிகத் தெளிவாகக் குறிக்கின்றுர்கள். இந்த 47வது தேவகுமாரன் ஒரு சீவன்முத்தன்; அருவுருவ சித்தியாளன். பிறரை நம்ப வைப்பதற்காகத் தனக்குக் கிடைத்த தெய்வீகச் சத்திகளை யெல்லாம் குருவாணையை மீறிச் செலவிட்டுவிட்ட காரணத்தினுல்தான் உடல் சிதைந்து குருதி கொட்டி மூன்று நாட்கள் மரணமென்னும் துக்கத்தில் ஆழ நேரிட்டது என்ற குறிப்பும் குருபாரம்பரியத்தில் உள்ளது.



**11வது ஞானாச்சாரியார், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார். இவரே தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகச் செயல்பட்டு தமிழின அருட்பேரரசான பிற்காலச் சோழப்பேரரசை (கி.பி.785 - கி.பி.1279) உருவாக்கினார்.**

**இவருக்கு அடுத்துப் பீடாதிபதியாகப் பட்டமேற்ற 12வது ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் எழுத்துக் குவியல்களிலிருந்து சிலவற்றை இந்தச் சுற்றறிக்கையின் மூலம் வழங்குகின்றோம்.**



**சென்னை, காரனோடையில் குருதேவர் அமைத்த கோயிலில் மட்டுமே உள்ள அம்மையப்பர் வடிவம்.**

---

Published on behalf of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar.
Published by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram.
Printed at Kavin Printers, Madurai